VIRUDHUNAGAR MUNICIPALITY

FORM 3

Minutes of the Meeting held on 31.07.2020

| Date of Council meeting | Decision Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 31.07.2020 | 711 | **பொருள் – 1**<br>இந்நகராட்சியின் பராமரிப்பில் வி.என்.பி.ஆர். பூங்கா அருகில் கல்லூரி சாலை சந்திப்பில் உள்ள (வார்டு எண்.36) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கீழ்பகுதி தரை மிகவும் தாழ்வாக உள்ளதை உயர்த்தும் பொருட்டு பேவர்கல் தளம் பதிக்கவும் வால்வு தொட்டிகளை உயர்த்தி கட்டவும் உண்டான உத்தேச செலவினம் தொகை ரூ.4,00,000/–ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு (குடிநீர் நிதி) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் .<br>இ1/2685–1/2020 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 712 | **பொருள் – 2**<br>விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகையினம் 2015-2018ம் ஆண்டு குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர் திரு.சுந்தர்ராஷ், திரு.அண்ணாதுரை என்பவர்கள் குத்தகைத் தொகை செலுத்தாததால் நிலுவைக் குத்தகைத் தொகையினை செலுத்திடக்கோரி மாவட்ட நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் வழக்கு எண்கள் ஓ.எஸ்.எண். 99, 100, 101/2019 தாக்கல் | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>செய்யப்பட்டு 18.12.2019ம் தேதி இந்நகராட்சிக்கு சார்பாக தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது. மேலும் வருவாய் மீட்புச் சட்டத்தின் படி குத்தகைதாரர்களின் சொத்தின் மூலம் குத்தகை நிலுவைத் தொகையினை வசூல் செய்ய நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள தீர்ப்பாணையினை மீது Executive Petition தாக்கல் செய்திட இந்நகர் மன்ற வழக்கறிஞர் திரு.கே.ரவி அவர்களுக்கு பரிந்துரை செய்யவும் மேலும் மேற்கண்ட தீர்ப்பாணை பெற்றுக் கொடுத்தமைக்கு வழக்கறிஞர் கட்டணம் வழக்கு ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் மூன்று வழக்கிற்கு ரூ.30,000/- இந்நகர் மன்ற வழக்கறிஞர் திரு.கே.ரவி அவர்களுக்கு வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.12511/2014/அ1</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>713</td>
<td>பொருள் – 3<br>இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்2ல் அமைந்துள்ள புல்லலக்கோட்டை சாலை மற்றும் நான்கு வழிச் சாலை சந்திப்பு தென்புறம் உள்ள இணைப்பு சாலையில் 6மின் கம்பங்களில் 36 வாட்ஸ் எல்.இ.டி தெரு விளக்குகள் 6 எண்ணம் பொருத்தும் பணியினை ரூ1.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்ள இந்நகர் மன்றத் தீர்மான எண்.603 . நாள்.28.02.2020ல் அனுமதி அளித்துள்ளது.அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 05.06.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.<br>
<table>
<tr><th>வஎண்</th><th>ஒப்பந்ததாரர் விபரம்</th><th>மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.பி.சுந்தரேஸ்வரி–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.22 சதவிகிதம் குறைவு.</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஆர்.சுந்தர்ராஜ்–விருதுநகர்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.44 சதவிகிதம் அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திருமதி.பி.சுந்தரேஸ்வரி, ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>அலுவலகக் குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ2/1505/2020</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 714 | **பொருள் – 4**<br>இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்4ல் அமைந்துள்ள கச்சேரி ரோடு ஸ்டார் லாட்ஜ் வடபுறம் உள்ள தெருவில் 6மின் கம்பங்களில் 36 வாட்ஸ் எல்.இ.டி தெரு விளக்குகள் 6 எண்ணம் பொருத்தும் பணியினை ரூ1.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொள்ள இந்நகர் மன்றத் தீர்மான எண்.601 நாள்.28.02.2020ல் அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 05.06.2020ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு<br><br>வஎண் \| ஒப்பந்ததாரர் விபரம் \| மதிப்பீட்டு விலை விகிதம்<br>1 \| திருமதி.பி.சுந்தரேஸ்வரி–விருதுநகர் \| மதிப்பீட்டைக் காட்டிலும் 0.22 சதவிகிதம் குறைவு.<br>2 \| திரு.ஆர்.சுந்தர்ராஜ்–விருதுநகர் \| மதிப்பீட்டைக் காட்டிலும் 0.44 சதவிகிதம் அதிகம்.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள திருமதி.பி.சுந்தரேஸ்வரி, ஒப்பந்தக்காரர், விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>அலுவலகக் குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ2/1242/2020 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 715 | **பொருள் – 5**<br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநர் வழங்கல் துறை (MAIV) துறை அரசாணை G.O Ms No 73 நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண் G.O Ms No 76 நாள் 23.07.2018ன் படி விருதுநகர் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்டது, அதன் படி குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவீதமும், வணிகம் மற்றும் தொழிற்சாலை கட்டிடங்களுக்கு 100 சதவீதமும் பொது சீராய்வு மேற்கொள்ளப்பட்டதனை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண் 150 நாள் 19-11-2019ன் படி அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட பொது | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

சீராய்வினை ரத்து செய்து மீண்டும் சீராய்வுக்கு முந்தைய சொத்துவரிக்கு மாற்றம் செய்யப்பட்டது, அதில் கீழ்கண்ட வரிவிதிப்பு எண்களின் சொத்துவரித் தொகை பழைய வரித் தொகைக்கு மாறாமல் உயர்த்தப்பட்ட வரித் தொகையிலேயே இருந்து வருகிறது, எனவே கீழ்கண்ட வரிவிதிப்பு எண்களுக்கு சொத்துவரி பொது சீராய்வுக்கு முந்தைய பழைய வரித் தொகைக்கு அரசாணையின் படி திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வரிவிதிப்பு எண்கள் | கணிணியில் உள்ள ஆறுமாத சொத்து வரித் தொகை ரூ. | | | | கணிணியில் திருத்தம் செய்யப்பட வேண்டிய ஆறு மாத சொத்துவரித் தொகை ரூ. | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2017-2018 | 2018-2019 | 2019-2020 | 2020-2021 | 2018-2019 | 2019-2020 | 2020-2021 |
| 1 | 132/3561 | 38525 | 38525 | 77050 | 77050 | | 38525 | 38525 |
| 2 | 132/3696 | 10451 | 10451 | 20902 | 20902 | | 10451 | 10451 |
| 6 | 132/17019 | 8928 | 39762 | 48690 | 48690 | | 8928 | 8928 |

ந.க.எண் ; 2111/2017/அ1

716

**பொருள் – 6**

விருதுநகர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு தற்பொழுது வரை பிரதான நீரேற்று நிலையம் (STP) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி STP பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணியானது மே 2020ல் முடிவடைந்த நிலையில் மேற்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் பராமரிக்கப்பட்டு வருவதை நகராட்சி வசம் ஒப்படைக்கும் பட்சத்தில், சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணிகளான மின் மோட்டார்களை இயக்குதல், ஆய்வக உதவியாளர், மற்றும் காவலரகள் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள நகராட்சி பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் தற்பொழுது இல்லை என்பதால், மேற்படி STP நிலையத்தில் (கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்) கீழ்கண்ட பணியாளர,களை ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியர், விருதுநகர் அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.எண் A7/2019/18050 நாள் -10-2019ல் குறிப்பிட்டுள்ள விலை விகிதப்படி பணியமர்த்தி கொள்ளவும் மேலும் மேற்படி பணியாளர்ளை தினக்கூலி அடிப்படையில் Out Sourcing அல்லது சுய உதவிக் குழு மூலம் பணியமர்த்தவும் அதற்கான உத்தேச மதிப்பீடு (6 மாத காலத்திற்கு) ரூ.6,10,000/-க்கு ( ஆறு லட்சத்து

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
பத்தாயிரம் மட்டும்) வழங்கிடவும், மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்</td><td>பணியாளர்கள் விபரம்</td><td>நபர்கள்</td></tr>
<tr><td>1</td><td>ஆய்வக உதவியாளர்</td><td>1 நபர்</td></tr>
<tr><td>2</td><td>தொகுதியாளர்</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td>3</td><td>காவலர்</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td>4</td><td>மேற்பார்வையாளர் (Supervisor)</td><td>1 நபர்</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு ;<br>
1. பாதாளச் சாக்கடை திட்டம் சிப்பம் IIIன் கீழ் வரும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வாயிலாக ஒப்படைக்கும் நிலையில் நகராட்சி பொறுப்பில் தொடர்ந்து பராமரிக்கும் பொருட்டு மேற்கண்ட பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் Out Sourcing அல்லது சுய உதவிக் குழு மூலம் பணியமர்த்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்கண்ட பணியாளர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்த புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மேற்படி செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண் ; 02975/2020/இ2
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>717</td>
<td>
பொருள் – 7<br>
விருதுநகர் நகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு - வாகனம் TN 67 AF 8139 JCB வாகனத்திற்கு பேட்டரி வாங்க கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்று உள்ளது.<br><br>
1. Sri Maha Battery Service, Virudhunagar - Rs.13,000/-<br>
2. Sri Gayathiri Power System, Virudhunagar– Rs.13,800/-<br>
3. Sri Naga Battery Service, Virudhunagar – Rs.13,500/-<br><br>
குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sri Maha Battery Service, விருதுநகர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கவும், மேற்படி செலவினத்தொகையை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.ந.க.எண். 2157/2020/எச்1.
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 718 | **பொருள் – 8**<br>இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் அறிவிப்பு ஸ்டிக்கர் A4 சைஸ் அச்சிடவும், கணக்கெடுப்பு படிவம் முன்னும் பின்னும் அச்சிடவும் 10000 எண்ணம் வாங்குவதற்கும் உத்தேச தொகை ரூ.28850/-(இருபத்து எட்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) அதனை ஜானகி பிரிண்டர்ஸ் மூலம் பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3921/2016/எச்1. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 719 | **பொருள் – 9**<br>இந்நகராட்சி பகுதிகளில் கொரானா (Covid-19) வைரஸ் நோய் தாக்கம் ஏற்பட்ட பகுதிகளில் தொற்று ஏற்படாத வகையில் தடுப்புகள் ஏற்படுத்துவதற்கு திரு.M.ஜெயபாண்டி ஒப்பந்ததாரர் மூலம் பணியினை செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ10,00,000/- (ரூபாய் பத்து லட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3921/2016/எச்1. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 720 | **பொருள் – 10**<br>இந்நகராட்சி பகுதிகளில் கொரானா காய்ச்சல் (Covid-19) தடுப்பு பணிகள் தொற்று ஏற்பட்ட பகுதிகளில் தடுப்புகள் ஏற்படுத்தி அதில் பிளக்ஸ் பேனர் மூலம் அறிவிப்பு செய்திட 200 எண்ணம் பிளக்ஸ் பேனர்கள் அச்சிடுவதற்கு உத்தேச செலவுத்தொகை ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3921/2016/எச்1. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 721 | **பொருள் – 11**<br>விருதுநகர் நகராட்சி பகுதிகளில் கொரானா காய்ச்சல் (Covid-19) பரவுவதை தடுக்க கொரோனா காய்ச்சல் பாதிக்கப்பட்ட வீடுகள், தெருக்கள் மற்றும் அதை தொடர்ந்து அருகில் உள்ள பகுதிகள் மற்றவர்களுக்கு தொற்று ஏற்படாமல் தடுக்க தடை செய்யப்பட்ட பகுதிகளை அறிந்து அதனை தடுப்பு கொண்டு தடுக்கும் பணிக்கு பதினெட்டான் படியான் லோடு ஆட்டோ (திரு.R..முனியசாமி) பர்மா காலனி என்பவருக்கு கொடுக்கப்பட்ட பணிக்கான செலவுத்தொகை நகராட்சி விதி 15ன் கீழ் ரூ.17650/- (ரூபாய் பதினேழாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3921/2016/எச்1. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 722 | **பொருள் – 12**<br>இந்நகராட்சி அலுவலகத்தில் பெருந்தலைவர் காமாராசர் அவர்களின் பிறந்த நாளை (15.07.2020) முன்னிட்டு 14.07.2020 மற்றும் 15.07.2020 ஆகிய இரண்டு தினங்கள் ஒளி அமைப்பு செய்ய பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | வேலையின் விபரம் | விலைப்புள்ளிதாரர்கள் | | |
|---|---|---|---|---|
| | | பிரியா சவுண்ட் சர்வீஸ் 58, குல்லூர் சந்தை ரோடு, விருதுநகர். | பாண்டியன் ரேடியோஸ், 17,முத்தாலம்மன் சாவடி தெரு, விருதுநகர் | P.அசோக் எல்க்ட்ரிக்கல்ஸ் சவுண்ட் சர்வீஸ் 34, LIG காலனி விருதுநகர் |
| 1. | சீரியல் செட் 1 எண்ணம் 1 நாள் வாடகை | ரூ.45.00 | ரூ.47.00 | ரூ.48.00 |
| 2. | Day Light 1 எண்ணம் 1 நாள் வாடகை | ரூ.400.00 | ரூ.425.00 | ரூ.435.00 |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலக குறிப்பு :<br><br>1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் அளித்துள்ள பிரியா சவுண்ட் சர்வீஸ் விருதுநகர் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.இ2/02844/2020 | |
| | 723 | **பொருள் – 13**<br>பெருந்தலைவர் காமாராசர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 14.07.2020 மற்றும் 15.07.2020 ஆகிய இரண்டு தினங்கள் நகராட்சி அலுவலகத்தில் ஒளி அமைப்பு செய்யவும், ( சீரியல் செட் 100 எண்ணம் Day Light 2 எண்ணம் ) வாடகைக்கு பொருத்தி எரியச் செய்து கொடுக்கவும். அதற்கான உத்தேச செலவினம் ரூ.11,000/- (ரூபாய் பதினோறாயிரம் மட்டும்) க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.இ2/02844/2020 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 724 | **பொருள் – 14**<br>இந்நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தொற்று பரவாமல் இருக்க கிருமி நாசினி இயக்கும் இயந்திரம் வாகனத்தில் பொருத்தி இயக்க உத்தேச செலவுத்தொகை ரூ.85,000/- (ரூபாய் எண்பத்தைந்தாயிரம் மட்டும்) மற்றும் மேற்கண்ட பணியினை R.சுந்தர் ராஜ் என்பவர் மூலம் பணியினை செயல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3921/2016/எச்1. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 725 | **பொருள் – 15**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 57 BOV வாகனம் பெறப்பட்டு சுகாதார பணிகள் மேற்கொண்டு வருகிறது. அவ்வப்போது ஏற்படும் சிறிய பழுதின் காரணமாக BOV வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதனால் பணிகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுவதால் 57 BOV வாகனத்தினை செலவுத்தொகை ரூ.6,00,000/- (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) அதனை எடுத்து செயல்படுத்த வெற்றி ஆட்டோ மொபைல்ஸ், விருதுநகர் பழுது பார்ப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 726 | **பொருள் – 16**<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான அசையாச் சொத்துகளின் மூலம் பெறப்படும் வரவினங்களளுக்கு 2007-2008 முதல் 2011-2012ம் ஆண்டு வரை மற்றும் 2012-2013ம் ஆண்டிற்கு சேவை வரி மற்றும் மேற்கண்ட காலத்தில் சேவை வரி செலுத்தாமல் இருந்தால் Penality, Interest சேர்த்து செலுத்திடக் கோரி மத்திய அரசின் கலால் மற்றும் சேவை வரித் துறை, விருதுநகர் அவர்களிடமிருந்து 25-06-2013ம் தேதி பெறப்பட்ட Show Cause Notice னை எதிர்த்து மத்திய கலால் மற்றும் சேவை வரித் துறை ஆணையர் (மேல்முறையீடு), மதுரை அவர்களிடம் Appeal செய்யப்பட்டும், அதனைத் தொடர்ந்து CESTAT, சென்னை அலுவலகத்திலும் மேல்முறையீடு செய்யப்பட்டு இது நாள் வரை CESTAT, சென்னை அலுவலகத்தில் நிலுவையாக இருந்து வந்த நிலையில் மத்திய அரசின் SABKA VISHWAS (LEGACY DISPUTE RESOLUTION) SCHEME-2019ன் படி செலுத்தப்பட வேண்டிய சேவை வரித் தொகைக்கான Penality, Interest, Service tax Non Registeration Penality என அனைத்தும் நீக்கம் செய்து விட்டு, செலுத்த வேண்டிய சேவை வரித் தொகையிலும் குறைத்து 30சதவீதம் மட்டும் செலுத்தலாம் என்ற இந்நகரராட்சி கலந்தாலோசகர் திரு.கணேசன், விருதுநகர் அவர்கள் அறிவுரை வழங்கியதன் படி SCHEME-2019ல் தாக்கல் செய்து தற்பொழுது மத்திய அரசின் கலால் மற்றும் சுங்க வரித் துறையிடமிருந்து 2007-2008ம் ஆண்டு முதல் 2012-2013ம் ஆண்டு வரை எவ்வித வரி பாக்கியும் நிலுவை இல்லை என உத்தரவு கடிதம் பெறப்பட்டு வழக்கானது முடிவடைந்து விட்டது, எனவே இந்நகராட்சி சார்பில் தொடரப்பட்ட நிலுவையில் இருந்த அனைத்து சேவை வரி வழக்குகளும் | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | முடிவடைந்து விட்டது என்பதனை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது, எனவே இந்நகராட்சி சார்பில் சப்கா விஸ்வாஸ் ஸ்கீம்ல் கணக்கு தாக்கல் செய்து முடித்தமைக்காக சேவை வரி கலந்தாலோசகர் கட்டணம் ரூ 5000/- திரு.கணேசன், விருதுநகர் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண் ; 7825/2013/அ1. | |
| | | | |